க.பொ.த. உயர் தரத்திற்கான

வாரப்பாடசாலை செயற்பாட்டுப் பத்திரம்

பாடம் :- தமிழ் தரம்:- 12

**01. பின்வரும் கவிதையைப் படித்து கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.**

காயுருட்டலானார் - சூதுக்களி தொடங்களானார்
மாயமுள்ள சகுனி – பின்னும் வார்த்தை சொல்கிறான்.
நீ அழித்ததெல்லாம் - பின்னும் நின்னிடத்து மீளும்
ஓய்வடைந்திடாதே – தருமா! ஊக்க மெய்து கென்றான்

கோயிற் பூசை செய்வோர்- சிலையைக் கொண்டு விற்றல்
வாயில் காத்து நிற்போன் - வீட்டை வைத்திழத்தல் போலும் போலும்
ஆயிரங்களான – நீதியவை உணர்ந்த தருமன்
தேயம் வைத்திழந்தான் - சீச்சீ! சுறியர் செய்கை செய்தான்.

நாட்டு மாந்தரெல்லாம் - தம் போல நரர்களென்று கருதார்
ஆட்டு மந்தையாமென – றுலகை அரசரெண்ணி விட்டார்
காட்டு முண்மை நூல்கள் - பல தரங்காட்டினார்களேனாலும்
நாட்டு ராச நீதி – மனிதர நன்கு செய்யவில்லை.

ஓரஞ் செய்திடாமே – தருமத் துறதி கொன்றிடாமே
சோரஞ் செய்திடாமே – பிறரைத் துயரில் வீழ்த்திடாமே
ஊரையாளு முறைமை – உலகில் புறத்ததுமில்லை
சுாரமற்ற வார்த்தை! – மேலே சரிதை சொல்லுகின்றோம்.

1. சகுனி தருமனை விளையாடத் தூண்டும் முறைமையினை எடுத்துக் காட்டுக.
2. தருமனின் செய்கையை ஆசிரியர் எவ்வாறு இழிவுப்படுத்திக் காட்டுகின்றார்?
3. அரசர்கள் பற்றிக் கவிஞர் கொண்ட கருத்து யாது?
4. “ஊரையாளும் முறைமை உலகில ஓர் புறத்ததுமில்லை” என்ற வரிகளினூடாக நீர் விளங்கிக் கொள்வது யாது?

02. பின்வருவனவறறுள் யாதேனும் ஒரு தலைப்பைத் தெரிந்து 250-300 சொற்களில் கட்டுரை ஒன்று எழுதுக.

1. யாவரையும் மதித்து வாழ்
2. சமூக ஊடகங்களின் நன்மை தீமைகள்.
3. அன்பால் அகிலம் வெல்வோம்.
4. தற்கால சின்னத்திரை நாடகங்களும் சமூக சீரழிவுகளும்.